Registered as a News Paper   பக்கங்கள் 6   விலை ரூபா 5-00:

# ஈழநாதம்

EELANAATHAM Peoples Daily   மக்கள் தினசரி

நாதம் 04   திருவள்ளுவர் ஆண்டு 2024   மாசி 16   [27 - 2 - 1993]   சனிக்கிழமை   ஓசை 09

## பொருள்களை இறக்க மீன்பிடிப் படகுகள்

யாழ். குடா நாட்டிற்கான உணவு மற்றும் பொருள்களுடன் இன்னும் சில தினங்களில் கொழும்பில் இருந்து பருத்தித்துறையை வந்தடையவுள்ள கப்பல்களில் இருந்து பொருள்களை மிகதுரிதமாக இறக்க இழுவைப் படகுகளுடன் இணைந்து மீன்பிடிப் படகுகளும் சேவையில் ஈடுபடுத்தப்படவுள்ளதாக தெரியவருகின்றது. தற்பொழுது யாழ். குடாநாட்டிற்கான உணவு மற்றும் பொருள்களை கொழும்பு மற்றும் திருக்கோணமலையில் ஏற்றிக்கொண்டிருக்கும் குமாரி, குமண, வாதுவ மற்றும் நில்கிரி ஆகிய கப்பல்கள் [6ஆம் பக்கம்பாக்க]

# புலிகளின் கண்ணிவெடியில் சிக்கிய கடற்படை ரோந்துப்படகு சிதறியது

## இரு படையினர் பலி; மூவர் காயம் கிளாலி கடற்பரப்பில் சம்பவம்

(கொழும்பு)

கிளாலி கடற்பரப்பில் சிறிலங்கா கடற்படை ரோந்துப் படகொன்று விடுதலைப் புலிகளின் கண்ணி வெடியில் சிக்கிச் சிதறியதாகவும், அதில் பயணம் செய்த இரு கடற்படையினர் கொல்லப்பட்டதாகவும், மூவர் காயமடைந்ததாகவும் சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்களை மேற்கோள் காட்டி ஏஜென்சி செய்திகள் தெரிவிக்கின்றன

இந்த படகு கூடிய குதிரைச் சக்தி கொண்ட மோட்டார் இயந்திரத்தைக் கொண்டதெனவும் இப்படகில் சக்திவாய்ந்த இயந்திரத் துப்பாக்கிகள் பொருத்தப்பட்டிருந்தது எனவும் தெரிவிக்கப்படுகிறது. மேலும் கடற்படையினருக்குத் தேவையான பல உபகரணங்கள் இப்படகில் எடுத்துச் செல்லப்பட்டதாகவும் கூறப்படுகிறது.

இக் கண்ணி வெடிச் சம்பவம் கிளாலி கடல் நீரேரியில் சிறிலங்கா கடற்படையினரின் ரோந்து நடவடிக்கைக்குப் பலத்த அச்சுறுத்தலாக உள்ளது என படை அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

## அரசைமுழு அளவு எதிர்க்கும் சக்தியாக புலிகள் வளர்ச்சி

### பி. பி. சி. ஆய்வாளர் கணிப்பீடு

(லண்டன்)

விடுதலைப் புலிகள் நடத்தும் புரட்சி குறைந்து மறையும் அறிகுறிகள் எதுவும் தென்படுவதாக இல்லை. மேலும் வளர்ந்து பெரிதாகிவிடும் அறிகுறிகளே தென்படுகின்றன. இவ்வாறு விடுதலைப் புலிகளின் வளர்ச்சி குறித்து பி. பி. சியின் செய்தி ஆய்வாளர் கிறிஸ் மோறிஸ் தெரிவிக்கின்றார்.

மேலும் அவர், சிறு இயக்கமாக ஆரம்பித்த விடுதலைப் புலிகள் இயக்கம் இன்று முழு அளவில் அரசை எதிர்த்துப் போராடும் இயக்கமாக மாறியுள்ளது எனவும் தெரிவித்துள்ளார்.

விடுதலைப் புலிகள் முழுமையாக தங்களையே தாங்கள் சார்ந்து நிற்கவேண்டிய நிலையில் இருந்தாலும் அவர்கள் கடந்த 10 ஆண்டுகளில் ஏற்படுத்தியுள்ள மாபெரும் சர்வதேச தொடர்புகள் மூலம் சமாளித்துக் கொண்டிருக்கின்றார்கள். உலகில் 50 நாடுகளுக்குமேல் பரந்து வாழ்ந்து வரும் பல ஆயிரக் கணக்கான இலங்கைத் தமிழர்களின் ஆதரவினால் இந்தத் தொடர்பு சாத்தியமாகின்றன என்றும் தெரிவித்துள்ளார்.

இச் சர்வதேச தொடர் [5 ஆம் பக்கம் பார்க்க]

## 2000 பீப்பா மண்ணெய் நில்கிரி கப்பலில் வரும்

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டில் தற்பொழுது ஏற்பட்டுள்ள எரிபொருள் தட்டுப்பாட்டை சீர் செய்யும் வகையில் முதற்கட்டமாக இரண்டாயிரம் பரல் மண்ணெண்ணெய் நில்கிரி என்கின்ற கப்பலில் கொழும்பு துறைமுகத்தில் இருந்து பருத்தித்துறை துறைமுகத்திற்கு எடுத்துவரப்படுகின்றது என யாழ். செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

மேலும் இதே போன்று மாதாமாதம் 2000 பரல் மண்ணெண்ணெய் கொழும்பில் இருந்து யாழ்ப்பாணம்நோக்கி அனுப்பி வைக்கப்படவிருப்பதாக அத்தியாவசியசேவைகள் ஆணையாளர் அறிவித்துள்ளதாகவும் தற்சமயம் கொழும்பில் தங்கியிருக்கும் யாழ். அரச அதிபர் யாழ். குடா [5 ஆம் பக்கம் பார்க்க]

### உளவாளிகள்!!!

### அவதானமாக இருக்கவும்...!

நாம் அகதியாய் அலைய அவர்களும் சேர்ந்தே அலைவர்,
கூடவே படுத்துறங்கிப் பலகதைகள் கூறுவர்!

இந்திய பாராளுமன்றத்தினுள்

## கண்ணீர்ப்புகைக்குண்டுடன் பா.ஜனதா ஆர்ப்பாட்டம்

(டில்லி)

நேற்று முன்தினம் டில்லியில் பாரதீய ஜனதா கட்சியினால் நடாத்தப்பட்ட ஊர்வலத்தை தடுத்து நிறுத்தியதை ஆட்சேபித்து நேற்று இந்திய நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் கூச்சலும், குழப்பமும் நிலவியது.

பாரதீய ஜனதாக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கறுப்புக் கொடிகளையும் கண்ணீர்ப் புகைக் குண்டுகளையும் கைகளில் ஏந்தியவாறு சபையின் மையப்பகுதிக்குச் சென்று கூச்சலிட்டு குழப்பம் விளைவித்தனர்.

இதனையடுத்து இந்திய நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் நேற்று அலுவல்கள் எதுவும் நடைபெறவில்லை என தெரிவிக்கப்படுகிறது.

## பிரான்பற்று மக்களுக்கு நிவாரணம் இல்லை

### 10 தினங்களாக மறியல்

(யாழ்ப்பாணம்)

பண்டத்தரிப்பு பிரான்பற்று பகுதியைச் சேர்ந்த 510 குடும்பங்களுக்கு நிவாரணம் நிறுத்தப்பட்டதைத் தொடர்ந்து அம்மக்கள் டத்து நாட்களாக சண்டிலிப்பாய்உதவிஅரசாங்க அதிபர் பணிமனை முன் மறியலில் ஈடுபட்டு வருகின்றனர். தமது கோரிக்கை நிறைவேறும் வரை மறியல் தொடரும் என இவர்கள் தெரிவிக்கின்றனர். இதனால் கடந்த 10 நாட்களாக செயலகம் இயங்க முடியாத நிலையில் உள்ளது.

கடந்த ஆகஸ்ட் மாதம் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கையை அடுத்து இடம் பெயர்ந்த அவர்களுக்கு எட்டுத் தடவைகள் மட்டுமேநிவாரணம் வழங்கப்பட்டது.

இது குறித்து பல அதிகாரிகளுடன் உரையாடிய போதிலும் பலன் எதுவும் கிட்டாத நிலையில் இவர்கள் மறியல் போராட்டத்தில் ஈடுபட்டுவருகின்றனர்.

இது தொடர்பாக சில பிரதி [6 ஆம் பக்கம் பார்க்க]

## கிளாலி-பூநகரி படகுச்சேவை

கிளாலி-பூநகரிப் படகுச் சேவை நாளை ஞாயிற்றுக்கிழமை வழமையான நேரத்திற்கு நடைபெறுமென யாழ். மாவட்ட வருவாய்ப் பொறுப்பாளர் யோ. தமிழ்க்குமரன் அறிவித்துள்ளார்.

## மீட்புநிதி சேகரிப்பு நேர அட்டவணை

கரவெட்டி உதவி அரசாங்க அதிபர் பிரிவைச் சேர்ந்தவர்களுக்கான மீட்பு நிதி சேகரிப்பு இன்று காலை 9.00 மணி தொடக்கம் 11.30 மணிவரை நெல்லியடி மகாவித்தியாலத்திலும் பருத்தித்துறை, வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவைச் சேர்ந்தவர்களுக்கான மீட்பு நிதி சேகரிப்பு இன்று பிற்பகல் 1.00 மணி தொடக்கம் 3.00 மணிவரை பருத்தித்துறை வட இந்து மகளிர் கல்லூரியில் இடம்பெறவுள்ளது.

இதே வேளை இதுவரை மீட்பு நிதி செலுத்தத் தவறியோர் தமது மீட்பு நிதிக் கடனை நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9.00 தொடக்கம் 10.00 மணிவரை நல்லூர் மங்கையற்கரசி மகாவித்தியாலயத்தில் செலுத்த முடியும் என தமிழீழ மீட்பு நிதிப் பொறுப்பாளர் சொ. வெற்றி அரசன் அறிவித்துள்ளார்.

## புலிகள் தாக்கியபோது படகில் ஏறிச்சென்றேன்

### மாலைதீவில் கைதான இராணுவம் தகவல்

(நமது நிருபர்)

விடுதலைப் புலிகளின் தாக்குதலில் இருந்து தப்பி ஓடி கடலில் இருந்த படகொன்றில் ஏறி மாலைதீவை வந்தடைந்தேன் என மன்னாரில் காணாமல் போன சிப்பாய் மாலைதீவில் வைத்து கைது செய்யப்பட்ட போது மாலைதீவுப் பொலிசாரிடம் தெரிவித்துள்ளார்.

இதுபற்றி மேற்படி இராணுவ சிப்பாய் மாலைதீவுப் பொலிசாருக்குவிளக்குகையில், மன்னார் நானாட்டானில் நான் கடமையில் ஈடுபட்டிருந்த போது பெப்ரவரி முதலாம் திகதியன்று விடுதலைப் புலிகள் எம்மீது தாக்குதலை மேற்கொண்டனர். சண்டை நடைபெற்றுக் கொண்டிருந்த [5 ஆம் பக்கம் பார்க்க]

## வரி விளம்பரம்

### சேவை

றொனி மூக்குக்கண்ணாடியகம் உங்கள் கண்களை பரிசோதித்து கண்ணாடி சரியாக வழங்கப்படும், இல. 288, நாவலர் வீதி, ஆனைப்பந்தி (யாழ்.தனியார் வைத்திய சாலைக்கு முன்பாக) யாழ்ப்பாணம். (4347)

### தென்மராட்சி வாடிக்கையாளர்கட்கு

எங்களிடம் சகல றேடியோக்கள், ரேப் றெக்கோடர்கள், மற்றும் மின்சார உபகரணங்கள், எலெக்றோனிக் ஓட்டோ மற்றிக் கடிகாரங்கள், மேசை-சுவர் மணிக்கூடுகள் உத்தரவாதத்துடன் திருத்திப் பெற்றுக்கொள்ள நாடுங்கள்; டில்கா வாச் அன்ட் றேடியோ வேக்ஸ் 3, கண்டி வீதி (இலங்கை வங்கி அருகாமையில்) சாவகச்சேரி. (சி-6082)

### பாடல் பதிவு

நீங்கள் விரும்பும் பாடல்களை இப்போது கொம்பக்ட் டிஸ்க் மூலம் பதிவு செய்து பெற்றிட இன்றே வாருங்கள் ஷண் றெக்கோடிங் ஸ்பொட், பஸ்நிலைய வயிரவர் கோவில் அருகாமையில், நவீன சந்தை உட்புறம், யாழ்ப்பாணம். (4066)


## பெறுபேறுகள் அனுப்பி வைப்பு

[யாழ்ப்பாணம்]

கிராமசேவையாளர் பரீட்சைக்குத் தோற்றியவர்களுக்கான பெறுபேறுகள் பரீட்சைத் திணைக்களத்தினால் சகல பரீட்சார்த்திகளுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இப்பரீட்சையில் முழுமையாகச் சித்தியடையாதவர்களுக்குப் பெறுபேறுகள் பாடவாரியாக பிரித்துக் காட்டப்பட்டுள்ளது.

இதேவேளை கிராமசேவையாளர் பரீட்சையில் சித்தியடைந்து பெயர்ப் பட்டியலில் பெயர் வந்தவர்களுக்கு பிரதேச செயலகவாரியாக எத்தனையாவது நிலையில் சித்தியடைந்துள்ளார் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. [05]

## பலிக்களம் மேடையேறும்

யேசு கிறிஸ்துநாதரின் பாடுகளைச் சித்தரிக்கும் பக்தி, இசை, உரை நாடகமான 'பலிக்களம்' நாடகம் குருநகர் திருமறைக் கலா மன்றத்தினரால் சித்திரைத் திங்கள் 1-ம், 2-ம், 3-ம், 4-ம் திகதிகளில் திருமறைக் கலாமன்ற அரங்கில் மேடையேற்றப்பட உள்ளது.

அத்துடன் இந்நாடகம் இத்தினங்களில் கனடா, பிரான்ஸ் மற்றும் கொழும்பு ஆகிய இடங்களில் இம்மன்றக் கிளைகளினால் மேடையேற்ற ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. [17]

## பொதுக்கூட்டம்

[யாழ்ப்பாணம்]

பளை பச்சிலைப்பள்ளி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கப் பொதுக்கூட்டம் இன்று முற்பகல் 10.00 மணிக்குப் பச்சிலைப்பள்ளி பல நோ. கூ. சங்க மண்டபத்தில் சங்கத் தலைவர் செ. மார்க்கண்டு தலைமையில் நடைபெறவுள்ளது.

# பவள விழாக் காணும் ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கம்

''தொன்மை மறவேல்'' என்ற குறிக்கோளுடன் இந்நூற்றாண்டின் தொடக்க காலத்திலே ஈழத்துத் தமிழ் வல்லாரும், வடமொழி வல்லாரும் ஒன்று கூடித் தமிழ், வடமொழி ஆகிய இருமொழிகளையும் அவற்றின் இலக்கண, இலக்கியச் செல்வங்களையும் பேணியும், கற்றும் அவற்றினது பண்பாட்டுச் செழுமையினைப் போற்றியும் வருதற்கென உருவாக்கிய நிறுவனமே யாழ்ப்பாணம் ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கமாகும். மரபுவழிக் கல்வியினையே தனது உயிர் நாடியாய்க் கொண்ட இச்சங்கம் பன்னூற்றுக்கணக்கான தமிழ், வடமொழிப் பண்டிதர்களைத் தமிழ் கூறும் இவ்வீழத் தமிழகத்திற்கு வழங்கி, அவர்களூடாகச் சிறந்த தொரு மாணாக்க பரம்பரைக்கு வித்திட்டமை நன்றியுடன் நினைவு கூரவேண்டியதொன்றே.

யாழ்ப்பாணத்திலே மாநாடுகளை நடத்தியும், ஆய்வுக் கட்டுரைகள் அடங்கிய மலர்களையும், பழந்தமிழிலக்கிய, இலக்கண நூல்களையும் வெளியிட்டும் அரும்பணி ஆற்றி வந்தமையும் குறிப்பிடத் தக்கதே.

தொடக்கத்தில், இலங்கை வித்தியா தரிசியைப் பதவி வழித் தலைவராயும், யாழ், பிரதேச உதவி வித்தியாதரிசியைப் பதவி வழிச் செயலாளராயும் கொண்டு இயங்கிய சங்கம், பின்பு யாழ்.பிரதேசக் கல்விப் பணிப்பாளரையும் பிரதிக் கல்விப் பணிப்பாளரையும் அப்பதவிகளிலமர்த்தி மரபுவழித் தமிழறிஞர்கள் உள்ளிட்ட செயற்குழுவுடன் செயலாற்றி வருகின்றது. அவ்வக் கால நெருக்கடிகளாலே இதன் பணிகள் தளர்ச்சியடைந்தாலும் மீண்டும் இதற்குப் புத்துயிரளித்துத் திறம்படச் செயலாற்ற வைப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

முன்னர் யாழ்ப்பாணத்தின் பல பகுதிகளிலும் பண்டித, பாலபண்டித, பிரவேச பண்டித வகுப்புக்கள் நடாத்தப்பட்டது போன்றே இதுகாலை யாழ். பிரதேசத்திலுள்ள ஆறு கல்விக் கோட்டங்களிலும் கல்வி மேம்பாட்டுப் பேரவையினதும், அவ்வக் கோட்டப் பிரதிக் கல்விப் பணிப்பாளர்களினதும் ஆதரவுடன் வகுப்புக்கள் நடைபெறவுள்ளன. அண்மையிலே பண்டத்தரிப்புக் கல்விக் கோட்டத்திலே பாலபண்டித பிரவேசபண்டித வகுப்புக்கள் (மானிப்பாய் இந்துக் கல்லூரியிலே) தொடக்கப்பட்டு விட்டன. வடமராட்சியிலே தொடங்குவதற்கான முன் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. விரைவில் மற்றுமுள்ள கல்விக் கோட்டங்களிலும்வகுப்புக்கள் தொடங்கும். கழக ஆசிரியர்களும், க. பொ. த. (உ-த) பரீட்சையிலே தமிழிற் சிறப்புச் சித்தி பெற்ற ஆசிரியரல்லாதாரும் பாலபண்டித வகுப்புக்களிலும், க. பொ. த. (சா-த) பரீட்சையிலே தமிழிற் சித்தியடைந்தோர் பிரவேச பண்டித வகுப்புக்களிலும் சேர்ந்து கற்கலாம்.

இவ்வாறுகற்க விரும்புவோர் அவ்வக் கோட்டப் பிரதிக் கல்விப் பணிப்பாளர்களோடு தொடர்பு கொண்டுதம்பெயர்களை விரைவிற் பதிந்து, தொடங்கும் வகுப்புகளிலே கற்றுப் பயன்பெறுமாறுவேண்டுகிறோம்.

சங்கத்தின் சிறப்புப்பொதுக் கூட்டம் 28-02-93 ஞாயிற்றுக் கிழமை காலை 9.00மணிக்கு வண்ணை வைத்தீசுவர வித்தியாலயத்தில் நிகழவுள்ளது. இக்கூட்டத்திலே தமிழ், வடமொழி வல்ல அறிஞர்களின் ஆய்வுரையும் சிறப்புரைகளும் இடம் பெறும். அறிஞர்களையும் தமிழார்வலர்களையும் இக் கூட்டத்திற்கு வருகைதருமாறு அன்புடன் அழைக்கின்றோம்

# டி.யு.என்.எப்புடன் இணைப்பு சு. கட்சியில் முரண்பாடு

(கொழும்பு)

ஜனநாயக ஐக்கிய முன்னணியை எதிர்க்கட்சிகளுடன் இணைக்கும் விடயம் தொடர்பாக சுதந்திர கட்சிக்குள் கருத்து வேற்றுமைகள் மேலோங்குகின்றன.

ஏற்கனவே தேர்தலை கருத்திற் கொண்டுஆறுஎதிர்க்கட்சிகள் கூட்டுச்சேர்ந்துள்ளன, இதேவேளை ஜனநாயக ஐக்கிய முன்னணியை இந்த எதிர்கட்சிகளின் கூட்டு இணைப்பதற்காக பல சுதந்திரகட்சி முக்கியஸ்தர்கள் முயன்றுவருகின்ற போது சுதந்திர கட்சியின் முக்கியஸ்தர்களில் ஒருவரான அனுரா பண்டாரநாயக்கா தேர்தல் உடன்பாடு சுதந்திர கட்சி அமைப்பாளர் ஊடாக நடைபெற வேண்டும் என்றும் இந்த அமைப்பாளரின் வேண்டுகோளுக்கு இணங்க அங்கத்தவர்கள் தெரிவு செய்யப்பட வேண்டும் என்றார்.

இதனை இக்கட்சி செயலாளர் தர்மசிறி சேனநாயக்க வன்மையாக கண்டித்துள்ளார் கூட்டுச்சேர்ந்த கட்சிகளின் ஓர் ஒப்பந்த அடிப்படையிலே அங்கத்தவர்களை நிறுத்த வேண்டும் என்ற கருத்தை வலியுறுத்தியுள்ளார். இவ்வாறு கருத்து வேறுபாடுகள் நிலவிக் கொண்டு இருக்கும் போது ஏனைய எதிர்க்கட்சிகள் ஜனநாயக ஐக்கிய முன்னணியுடன் பேச்சு நடத்திக் கொண்டுள்ளன என்று தெரியவருகின்றது

## ஆசிரியர் சம்பளம் வழங்கப்பட்டது

யாழ்.பிரதேச ஆசிரியர்களுக்குரிய இம்மாத சம்பளத்தை வழங்குவதற்குரிய கட்டுநிதி யாழ் பிரதேச கல்விப்பணிமனையினால் நேற்றையதினம் சகல கோட்டங்களுக்குப் பொறுப்பான நிதி உதவியாளர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

நேற்றைய தினமே இக்கட்டு நிதியை சில கோட்டக்கல்வி அலுவலகங்கள்வைப்பிலிட்டுத் தத்தமக்குக் கீழ்வரும் பாடசாலை ஆசிரியர்களுக்குரியஇம் மாதச்சம்பளப் பத்திரங்களை உரிய அதிபர்களிடம் வழங்கியதாக யாழ். கல்வித்திணைக்களம் தெரிவித்தது. [17]

## விசர்நாய் கடித்து மாணவன் மரணம்

சண்டிலிப்பாயைச் சேர்ந்த இளையதம்பி தவக்குமார் (வயது 15)என்ற மானிப்பாய் இந்துக் கல்லூரி மாணவன் விசர்நாய்க் கடியால் அண்மையில் பரிதாபகரமாக மரணத்தைத் தழுவிக் கொண்டார்.


பருத்தித்துறை / புலோலி தெங்கு பனம்பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கம் (மட்) மந்திகை, புலோலி.

**நேர்முகப் பரீட்சை**

கல்வி உத்தியோகத்தர், உற்பத்தி முகாமையாளர், வெல்லத் தொழிற்சாலைப் பொறுப்பதிகாரிகள் பதவிகளுக்கான விண்ணப்ப முடிவுத்திகதி 27-2-93. இவற்றிற்கான நேர்முகப்பரீட்சை 28 - 2 - 93 ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணிக்கு சங்கப் பணிமனையில் நடைபெறும். சகல சான்றிதழ்களுடன் சமுகம் தரவும்

த. மகேந்திரராஜா
பொதுமுகாமையாளர்

(4355)


## கண்ணீர் அஞ்சலி

**திரு. அ. நிமலன்**

அம்பாள் பேக்சரி உரிமையாளர்
மட்டுவில் வடக்கு, மட்டுவில்

எமது சங்கத்தின் உறுப்பினரும், தென்மராட்சிக் கிளை உப செயலாளரும், தென்மராட்சிக் கிளையின் வளர்ச்சிக்குப் பாடுபட்டவருமான திரு. அ. நிமலன் அவர்களின் மரணச்செய்தி கேட்டு ஆற்றொணாத்துயர் அடைகின்றோம். இவரின் மறைவுஎமது சங்கத்திற்குப்பேரிழப்பாகும்

அன்னாரின் இழப்பால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எங்கள் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம் அன்னாரின் ஆத்ம சாந்திக்கும் பிரார்த்திக்கின்றோம்.

யாழ் மாவட்ட பேக்கரி
உரிமையாளர் சங்கம்,
யாழ்ப்பாணம்

(4354)

## நினைவு கூருகின்றோம்...

**1993-2-27**

1986 ஆம் ஆண்டு இதே தினத்தில் யாழ் - தாவடிப் பகுதியில் எமது தும்புத் தொழிற்சாலை ஒன்றின் மீது சிறிலங்காப் படையினர் மேற்கொண்ட விமானத் தாக்குதலில் வீரச்சாவெய்திய -

**லுக்காஸ்** (— நீக்கலாஸ் - நாவலப்பிட்டி - மலையகம்)

இதே பகுதி மற்றும், சுதுமலை, கோண்டாவில், சுருவில் பகுதிகளிலும் சிறிலங்காப் படையினர் மேற்கொண்ட விமான, உலங்குவானூர்தித் தாக்குதல்களில் கொல்லப்பட்ட 3 தமிழர்கள்.

1991 ஆம் ஆண்டு மட்டு - தளவாய், பன்குடாவெளி பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் கைது செய்ய முயன்றபோது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய-

**கேதீஸ்** (களுவாஞ்சிக்குடி - மட்டு.)

1992 ஆம் ஆண்டு மட்டு - வாழைச்சேனை காகித ஆலை முகாமிலிருந்து கிராமங்களைச் சுற்றிவளைக்கும் நோக்குடன் வெளியேறிய சிறிலங்கா இராணுவத்தினர் மீது, பெண்டுகள்சேனைப் பகுதியில் வைத்து மேற்கொள்ளப்பட்ட அதிரடித் தாக்குதலின்போது ஏற்பட்ட சமரில், வீரச்சாவெய்திய -

**கப்டன் தாசன்** (தம்பிப்போடி விஜேந்திரன் - ஏறாவூர் - மட்டு.)

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்.

**தமிழீழ விடுதலைப் புலிகள்**

(சி-6095)


**மீண்டும்**
யாழ். நவீன சந்தை முன்பாக
புதிய சுவையுடன்
தரம் மிகு
**கோழிப் பிரியாணி**

**ரிக்கோ**
370, ஆஸ்பத்திரிவீதி, யாழ்ப்பாணம்.
(சி-6098)

# கல்வி வளர்ச்சி பெற ஆரம்பகல்வியேஅடிப்படை

## -அருட்திரு யோசப் அடிகளார்

(வடமராட்சி)

மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு ஆரம்பக் கல்வி அவசியம். வீட்டிற்கு அத்திவாரம் எவ்வளவு முக்கியத்துவம்பெறுகிறதோ அதேபோல மாணவர்களுக்கு ஆரம்பக் கல்வியும் முக்கியத்துவமானது.

இவ்வாறு நேற்று முன்தினம் வடமராட்சி இந்து மகளிர் கல்லூரியில் தமிழீழக் கல்வி மேம்பாட்டுப்பேரவையினரால் தமிழீழ கல்வி மேம்பாட்டுக் கழக தலைவர் அருட் திரு. யோசப் அடிகளாரின் தலைமையில் நடைபெற்ற 5ஆம் ஆண்டு புலமைப்பரிசில் தேர்வில் தேர்ச்சி பெற்ற மாணவர்களுக்கான பாராட்டு விழாவின் போது தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கும் போது,ஆரம்பக்கல்வி வீட்டின் அத்திவாரம் போலவும்,இடைநிலைக்கல்வி சுவர் போலவும், உயர்நிலைக்கல்வி கூரைபோலவும் மாணவனது கல்வி அமைந்திருக்கிறது.

ஒரு நாற்றுமேடையை விவசாயிபண்படுத்தி பராமரிப்பது போல் ஆரம்பக்கல்வியும்அமையப் பெறவேண்டும். தமிழீழ விடுதலைப் புலிகள் தமிழீழ மாணவர்களின் கல்விக்கு உறுதுணையாக இருந்து வருகின்றனர். இதனைப் பயன்படுத்தி மாணவர்கள் நற்பிரசைகளாகவும், அறிவுள்ளவர்களாகவும், பட்டதாரிகளாகவும் வளர்ந்து இந்த மண்ணுக்குச் சிறந்த சேவையாற்ற வேண்டும்.

எமது பிள்ளைகளுக்கு கல்வி புகட்டவும், நோயைக் குணப்படுத்தவும் வெளிநாடுகளிலிருந்து டாக்டர்கள், ஆசிரியர்களை வரவழைப்பது தவிர்க்கப்படவேண்டும்.எமது கலை, கலாசாரம், மொழி அழிந்து வருவதைத் தடுத்து அதனை வளர்க்க நாம் முன்வரவேண்டும். கல்வி அள்ளி அள்ளிக் கொடுக்க குறையாதது. கல்வியில் உயர்ந்தவர்கள் இளமை உள்ளவர்களாக இருப்பர்.

இதேவேளை சகல மாணவர்களுக்கும் சமமான முறையில் கல்வி புகட்டப்பட வேண்டும். கல்வி புகட்டும் விடயத்தில் மாணவர்கள் மத்தியில் ஆசிரியர்கள் அதிபர்கள்காட்டி வரும் வேறுபாடுகள் களையப் படவேண்டும். இத்தகைய நடவடிக்கை மாணவர்களின் கல்வி நிலையை பாழடிக்கச்செய்வது மட்டுமல்லாமல் உளரீதியாகவும் பாதிக்க வைத்துவிடும்.

சில மாணவர்களைத் தெரிந்துவைத்து கல்வி கற்பிப்பதும் மற்றவர்களை புறக்கணிப்பதும் தவிர்க்கப்பட்டு சகல மாணவர்களும் சகல கல்வியையும் கற்கும் நிலைக்கு ஆசிரியர்கள்,அதிபர்கள் செயற்படுவது அவசியம்.

யாழ் மாவட்டப் பாடசாலைகள் ஆசிரியர்கள் இன்றி வெறிச்சோடிக்கிடக்கிறது. ஆனால் இப்பகுதி ஆசிரியர்கள் கொழும்பு பாடசாலைகளில் பணிபுரிய முயற்சிக்கிறார்கள். ஆரம்பக்கல்வி ஆசிரியர்கள் மதிக்கப்பட்டு போற்றப்பட வேண்டியவர்கள் என்றார்.

தொடர்ந்து தமிழீழக் கல்வி மேம்பாட்டுக்கழக பொறுப்பாளர் திரு.வே.இளங்குமரன், வடமராட்சி பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. செ.செல்லத்துரை, வடமராட்சி அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் திரு.அரசண்ணா,பிரதேச கல்விப்பணிப்பாளர் திரு.புலேந்திரன், கல்வித் திணைக்களத்தைச் சேர்ந்த திரு சிவராசா ஆகியோர் உரையாற்றினர்.

இப்பாராட்டு விழாவின் போது 134 மாணவர்களுக்கு பரிசில்களும், பாராட்டுக்களும் வழங்கப்பட்டன. இவ் வைபவத்தில் கொத்தணி அதிபர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள் மற்றும் பலரும் கலந்து கொண்டனர். (யோ)

# பல்கலைக் கழகங்களில் பெண் ஊழியருக்கு சலுகை

[கொழும்பு]

பல்கலைக்கழகங்கள்,இணைப்புப் பல்கலைக் கழக கல்லூரிகள் ஆகியவற்றில்கடமையாற்றும் திருமணமாகிய பெண் ஊழியர்கள் தொடர்பாக பொதுநிர்வாகச் சுற்று நிருபம் இல.3-92 பந்தி இரண்டைச் செயற்படுத்தப் பல்கலைக் கழக மான்யங்கள் குழு தீர்மானித்துள்ளது.

இச்சுற்று நிருபத்தின் பிரகாரம், பெண் ஊழியர்கள் கருத்தரித்த 5 ஆம் மாத முடிவிலிருந்து அரைமணி நேரம் தாமதித்துக் கடமைக்குச் சமுகமளிக்கலாம்.அதேவேளை,காரியாலயம் முடிந்துபுறப்படும் நேரத்துக்கு அரைமணிநேரம் முன்னதாக காரியாலயத்தை விட்டு விலகிச் செல்லலாம். இந்தச் சலுகை மகப்பேறு வரையும் வழங்கப்படும்.

கருத்தரித்து ஆறாம் மாத ஆரம்பத்தில், சம்பந்தப்பட்ட ஊழியர் கருத்தரித்து ஐந்து மாதங்கள் கடந்து விட்டன என்று மருத்துவர் அத்தாட்சிப் படுத்தினால் மாத்திரமே இந்தச் சலுகை வழங்கப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதுதொடர்பாக அறிவுறுத்தல்கள் அனைத்துப் பல்கலைக் கழகங்கள் உப-வேந்தர்களுக்கும், பல்கலைக்கழக கல்லூரிகள் பணிப்பாளர்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. இந்தச்சலுகை உடன் செயற்படும் எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

# கிழக்கு பல்கலைகழகத்திற்கு தெரிவானோர் புறபபடுவர்

(யாழ்ப்பாணம்)

கிழக்கிலங்கை பல்கலைக் கழக பௌதிகத் துறைக்கு தெரிவு செய்யப்பட்ட முப்பத்தைந்துக்கும் மேற்பட்ட யாழ். மாவட்டமாணவர்கள் அடுத்த வாரமளவில் மட்டுநகர் புறப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இவர்களுக்கான அனுமதி அட்டைகள் யாழ். பல்கலைக் கழகத்தில் வைத்து வழங்கப் படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை 1991 - 92 கல்வியாண்டில் கிழக்கிலங்கை பல்கலைக்கழக பௌதிகத் துறை விரிவுரைகள் யாவும் இம்மாதம் 10 ஆம் திகதி முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

வெட்டுப்புள்ளி மேலும் குறைக்கப்பட்டுள்ளதால் நாடுபூராகவும் 170க்கும் மேற்பட்ட மாணவர்கள் பயனடைந்துள்ளனர். (05)

# காலியில் மீனவர்கள் மீது பொலீஸார் துப்பாக்கிச்சூடு

(காலி)

மீனவர்களுக்கும் பொலீஸாருக்கும் இடையே ஏற்பட்ட கைகலப்பை அடுத்து பொலீஸார் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் ஒரு மீனவர் படுகாயம் அடைந்துள்ளார்.

மேற்படி சம்பவம் காலி துறைமுகத்தை அண்டிய கடற்கரையில் நடைபெற்றுள்ளது என தெரிய வருகின்றது. இச்சம்பவத்தை தொடர்ந்து அப்பகுதிக்கு வந்த வேறு பொலீஸார் மீனவர்களைக் கைது செய்தனர். இதனைத் தொடர்ந்து மீனவர்களுக்குஇடையே பதற்றம் நிலவி வருகின்றதாக தெரிய வருகின்றது.

# வெட்டுப்புள்ளிகுறைப்பினால் 70 மாணவர்களுக்கு நன்மை

பௌதிகத்துறையில் ''வெட்டுப் புள்ளி'' மேலும் குறைக்கப்பட்டதனால் எழுபதுமாணவர்கள் யாழ்.பல்கலைக்கழகத்தில் தமது கல்வியை தொடர்ந்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

1991-92 கல்வியாண்டில் பரீட்சையில் சித்தியடைந்து யாழ். பல்கலைக்கழக பௌதிகத் துறையில் கல்விகற்றுவரும் மாணவர்களுக்கு குறிப்பிட்ட சில பாடத்தில் மட்டுமே விரிவுரைகளும் செய்முறைகளும் நடைபெறுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஏனைய சில பாடங்களை தாமாகவே கற்கும் படி மாணவர்களை விரிவுரையாளர் பணித்துள்ள தாக மாணவ தரப்பு குறை கூறியுள்ளது.

இது விடயத்தில் விஞ்ஞான பீடாதிபதி புதிதாக வந்த மாணவர்களின் நலனில் அக்கறை செலுத்தவேண்டுமெனத் தெரிவிக்கப்படுகிறது. (05)

# நாய்கள் ஒழிப்பு

[பருத்தித்துறை]

பருத்தித்துறை பிரதேச சபைப் பகுதியில் கடந்த 24-ம் திகதி முதல் கட்டாக்காலி நாய்களை அழிக்கும் நடவடிக்கைகள் பருத்தித்துறை பிரதேச சபை விசேட ஆணையாளர் திரு. சி. முருகேசபிள்ளையின் உத்தரவின் பேரில் மிகத் துரிதமாக நடைபெற்று வருகின்றன. இக்கட்டாக்காலி நாய்களை அழிப்பதற்கென பருத்தித்துறை பிரதேச சபை அண்மையில் சுமார் 35,000 ரூபாவுக்கு நாய் பிடிக்கும் வண்டில் ஒன்றையும் புதிதாகக் கொள்வனவு செய்துள்ளது. இப்பிரதேச சபைப் பகுதியில் கட்டாக்காலி நாய்களினால் பொதுமக்கள் பலத்த இன்னல்களையும், கஷ்டங்களையும் அனுபவித்து வருவதாகப் பருத்தித்துறை பிரதேச சபைக்குப் பொது மக்கள் செய்து கொண்ட புகாரையடுத்தே இத்துரித நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தெரிவித்த பிரதேச சபைச் செயலாளர் திரு. ச. செவ்வந்திநாதர் நாய்களை வளர்ப்போர் அவற்றினைக் கட்டி வளர்க்குமாறும் கோரிக்கை விடுத்துள்ளார். [25]

# ஆண்களுக்கான தையல் பயிற்சி

[வடமராட்சி]

கரவெட்டி இலங்கை செஞ்சிலுவைச் சங்கப் பணிமனையில் எதிர்வரும் 3 ஆம் திகதி ஆண்களுக்கான தையல் பயிற்சி ஆரம்பமாகவுள்ளது. மார்ச் மாதம் 1ஆம் திகதி இதற்குத் தகுதியான ஆண்களைத் தெரிவு செய்வதற்கான நேர்முகப் பரீட்சை காலை 8.30 மணிக்கு மேற்குறித்த பணிமனையில் நடைபெறும். [யோ]

# பட்டதாரி ஆசிரியர் நூலகர் பயிற்சி பெறலாம்

கலைப்பட்டதாரி ஆசிரியர்களாக கடமையாற்றும் பட்டதாரி ஆசிரியர்களுக்கு நூலகர் சேவையில் பயிற்சி வழங்கும் திட்டத்தை நடைமுறைப்படுத்த வடக்குக் கிழக்கு மாகாண கல்வி அமைச்சு நடவடிக்கை மேற்கொண்டுள்ளதாக என். ஈ. பி- பிடி ஈ- எஸ் ஓ - சீ - 69 இலக்க 18-1-93 கடிதப்படி சகல கோட்ட, மாவட்ட கல்விப் பணிப்பாளருக்கும் தெரியப்படுத்தி உள்ளது.

இந் நூலகர் பயிற்சியைப் பெற விரும்பும் கலைப்பட்டதாரிகளின் பெயர்களை உடனடியாக தமக்கு அனுப்பி வைக்குமாறும், இவ்வாறு பயிற்சியைப் பெறுவோர் தமது பாடசாலைக் கடமை நேரமுடிவில் இந்நூலகசேவையைச் செய்ய அனுமதிக்கப் படுவார்கள் எனவும் இக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (17)

# வவுனியாவில் வீடுகள் படையினரால் சோதனை

(வவுனியா)

வவுனியாவில் சிறிலங்காப் படையினர் ஆக்கிரமித்துள்ள பகுதிகளுக்குள் இருக்கும் வீடுகளை பொலீஸாரும் இராணுவத்தினரும் இணைந்து சோதனையிட்டதுடன் சிலர் விசாரணைக்காக அழைத்துச் செல்லப் பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

வவுனியாவில் உள்ள பூந்தோட்டப் பிரதேசத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை பொலீஸாரும், இராணுவத்தினரும் இணைந்து கடுமையான சோதனையை மேற்கொண்டனர். பொலீஸாரினால் வழங்கப்பட்ட அனுமதி அட்டைகள் பற்றியே சோதனையிடப்பட்டதாக பொலீஸார் தெரிவித்துள்ளனர். இதேபோல் சனிக்கிழமை கோவில் குளம் பகுதியிலும் இவ்வாறே சோதனை மேற்கொள்ளப்பட்டு பொலீஸ்பாஸ் இல்லாதவர்கள் முகாமுக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளனர்

# ஆசிரியர்கள் இன்மையால் பாடநெறிகள் இடைநிறுத்தம்

(யாழ்ப்பாணம்)

போதனா ஆசிரியர் இன்மையினால் பொதுக்கல்வி திட்டத்தில் ஆரம்பிக்கப்பட்ட பாடநெறிகள் பாடசாலைகளில் இடைநிறுத்த வேண்டிய ஒரு நிலை ஏற்பட்டுள்ளது.

யாழ்.இந்துக் கல்லூரியில் மரவேலையும், பருத்தித்துறை வேலாயுதம் பாடசாலையில் வானொலி பாடநெறியும் இவ்வாறு நிறுத்தப்பட்டவையாகும்.

எனவே பொதுக்கல்வி திட்டத்தின் கீழ் இப் பாடங்களை பயின்ற மாணவர் பெரிய கஷ்டத்தை எதிர் நோக்குகின்றனர். [நி]


யாழ்ப்பாணப் பல்கலைக்கழக
ஊழியர் சங்கத்தின் ஆதரவில்

தென்மோடி நாடக மரபில்

யாழ். பல்கலைக்கழக ஊழியர்கள்
பெருமையுடன் வழங்கும்

“சுதந்திர தாகம்”

(தென்மோடி நாட்டுக்கூத்தில்)
(கட்டப்பொம்மன் வரலாறு)

ஆக்கம், நெறியாள்கை: ப. டே. சற்குணராசா

காலம்:- 27. 02. 1993 (இன்று)
சனிக்கிழமை பி. ப. 3. 00 மணி

இடம்:- யாழ். பல்கலைக்கழக
கைலாசபதி கலையரங்கு

நுழைவுக் கட்டணம்:- ரூபா 50/- ரூபா 25/-

விளம்பர அன்பளிப்பு:
முத்தொளி வீடியோ,
கோண்டாவில் வடக்கு,
கோண்டாவில்.

(4348)



சுன்னாகம் பல நோக்குக் கூட்டுறவுச்சங்கம்
(வரையறுக்கப்பட்டது) சுன்னாகம்.

முக்கிய அறிவித்தல்

வலி தெற்கு உடுவில் உதவி அரசாங்க அதிபர் பிரிவிலிருந்து இடம் பெயர்ந்து கோப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவிலிருக்கும் குடியிருப்பாளர்களின் உலர் உணவு அட்டை ''இ'' க்கான தைமாத இறுதி இருவார இலவச நிவாரணங்கள் சுன்னாகம் பல நோ. கூ. சங்கத்தால் உரும்பராய் வடக்கில் இருக்கும் கிளையில் வைத்து விநியோகிக்கப்பட்டு வருகிறது. ''இ'' உலர் உணவு அட்டை உடையோர் தொடர்ந்து வரும் மாதங்களிலும் குறித்த நிலையத்தில் தங்கள் இலவச நிவாரணப் பொருள்களைப் பெற்றுக் கொள்ளலாமென அறியத் தருகின்றோம்.

பொது முகாமையாளர்
சுன்னாகம் பல நோ. கூ. சங்கம்.
25. 2. 1993

(சி-6099)

# தொலைக்காட்சி நேரத்தில் மாற்றம் ஏற்படுத்த முடியாது

## - மத்திய அமைச்சர் தெரிவிப்பு

(டில்லி)

சென்னைத் தொலைக்காட்சியில் தேசிய ஒளிபரப்பு தொடங்கும் நேரத்தை மீண்டும் முன்பிருந்தவாறு மாற்றுவது குறித்துத் தாம் ஒரு தரப்பாக முடிவெடுக்க முடியாது என்று நேற்று முன்தினம் நாடாளுமன்றம் மாநிலங்கள் அவையில் செய்தி ஒலிபரப்பு அமைச்சர் தெரிவித்தார்.

கேபிள் ரி.வி. போன்றவற்றின் போட்டியைச் சமாளிப்பதற்கான வழிவகைகளை ஆய்வு செய்வதற்கென அமைக்கப்பட்ட குழுவின் பரிந்துரைக்கு ஏற்பவே சென்ற ஜனவரி முதல் திகதியிலிருந்து தேசிய ஒளிபரப்பு நேரம் மாற்றப்பட்டது என்று அவர் தெரிவித்தார்.

பிராந்திய மொழி நிகழ்ச்சிகளின் நேரம் குறைக்கப்படக்கூடாது என்று அவை உறுப்பினர்களின் உணர்வுகளைப் புரிந்து கொண்டிருந்த போதிலும், ஒளிபரப்பு நேரத்தை மாற்றுவது குறித்து உடனடியாகத் தாம் முடிவு எதுவும் எடுக்க முடியாது என்றார்.

முன்னதாகக் கேள்வி நேரம் முடிந்த பிறகு அனைத்து இந்திய அண்ணா தி.மு.க. தலைவர் வி. சுவாமிநாதன், சென்னைத் தொலைக்காட்சியில் தேசிய நிகழ்ச்சி ஒளிபரப்பு நேரத்தில் மாற்றம் ரத்துச் செய்யப்பட வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

தி.மு.க. இந்திரக்காங்கிரஸ் உறுப்பினர்களும் இதே கருத்தை வெளியிட்டனர்.

ஒளிபரப்பு நேரம் மாற்றப்பட்டது தென் மாநிலங்களில் மறைமுகமாக இந்தி மொழியைத் திணிப்பது போல் உள்ளது என்றும், இதனால் அரசியல் கட்சிகள் அதனை எதிர்த்து ஆர்ப்பாட்டம் நடத்த வாய்ப்பு இருப்பதாகவும் அவர்கள் எச்சரித்தனர்.

பிராந்திய மொழிகளின் மேம்பாட்டில் அரசு அக்கறை கொண்டிருப்பதாக கூறப்பட்டாலும், தேசிய நிகழ்ச்சிகளில் 90 சதவிகிதம் இந்தி மொழியிலேயே உள்ளன என்றும் அவர்கள் குறிப்பிட்டனர்.

தாய்வான் சரக்கு கப்பலில்

## அமெ. செல்ல முயன்ற 128 சீனர்கள் கைது

(சிங்கப்பூர்)

தாய்வான் சரக்குக் கப்பல் ஒன்றின் மூலம் அமெரிக்கா செல்ல முனைந்த 128 சீன நாட்டவர் சிங்கப்பூர் பொலிசாரால் கண்டு பிடிக்கப்பட்டுள்ளனர். சட்ட விரோதமான முறையில் தாய்வானில் பதிவு செய்யப்பட்ட சரக்குக் கப்பலான சோலாஸ் மூலம் இவர்களைக் கடத்த முயன்ற கப்பலின் பிரதிநிதி, அதிகாரி உட்பட கப்பல் சிப்பந்திகள் அனைவரும் சிங்கப்பூர் பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கப்பல் சொந்தக்காரரின் பிரதிநிதி தாய்வான் பிரஜை ஒருவரும், பர்மா நாட்டவரான கப்பல் அதிகாரியும், கப்பலின் இரண்டாவது அதிகாரியான இலங்கையர் ஒருவருமாக மொத்தம் மூவர் குடிவரவு-குடியகல்வு சட்டங்களையும் - கப்பல் போக்குவரத்து விதிகளையும் மீறினர் என்ற குற்றச்சாட்டின் கீழ் சிங்கப்பூரில் நீதிமன்ற விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு உள்ளனர்.

தாய்லாந்து தாய்வான், மற்றும் ஹொங்கொங் ஊடாக சீன நாட்டவர்களை வெளிநாடுகளுக்கு கடத்துவதில் பல ஆசியாக்கள் ஈடுபட்டுள்ள போதும் சிங்கப்பூரில் மனிதர்கள் கடத்தப்படுவது கண்டுபிடிக்கப்பட்டிருப்பது இதுவே முதல் தடவையாகும் என்பது குறிப்பிடத்தக்கது.

## காணவில்லை



உடுவில் டச்றோட் சங்கர் வீதியைச் சேர்ந்த அப்புத்துரை தங்கராசா (வயது 56 என்பவரை கடந்த 11-02-93 இலிருந்து காணவில்லை இவர் கடைசியாக நீலச்செக் சாரமும் வெள்ளைச்சேட்டும் அணிந்திருந்தார் உயரம் 5 அடி வழுக்கைத்தலை சற்று மனம் குழம்பிய நிலையில் இருந்தார் இவரைக் கண்டவர்கள் அருகிலுள்ள காவல் நிலையத்திலோ அல்லது உடுவில் வட்டச் செயலகத்திலோ அறிவிக்கவும்.

தகவல்: தி. சிவானந்தராஜ்

(4353) [மகன்] [த. சிவா]

## அ. தி. மு. க. வெளிநடப்பு

(டில்லி)

சீனி உட்பட சில அத்தியாவசியப் பொருள்களின் விலையை மத்திய அரசு உயர்த்தியதை ஆட்சேபித்து தேசிய முன்னணி மற்றும் இடதுசாரிக் கட்சிகள் ராஜ்ய சபையில் கடந்த செவ்வாயன்று வெளிநடப்புச் செய்தன.

அனைத்து இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகமும் இந்த வெளிநடப்பில் கலந்து கொண்டது.


# பதவி வெற்றிடங்கள்

பின்வரும் பதவிகளுக்கு வெற்றிடங்கள் உள்ளன.

1. தன்னியக்க பிளேட்டன் இயக்குநர்
Automatic Platen Machine Minder
2. தன்னியக்கமற்ற பிளேட்டன் இயக்குநர்
Semi Automatic Platen Machine Minder
3. தன்னியக்க சிலிண்டர் இயக்குநர்
Automatic Cylinder Machine Minder
4. தன்னியக்கமற்ற சிலிண்டர் இயக்குநர்
Semi Automatic Cylinder Machine Minder
5. வெட்டு இயந்திர அனுபவத்துடன் கூடிய புத்தகம் கட்டுபவர்கள் (Binders)
6. இலக்கமிடுதல், கோர்த்துக்கட்டுதல் (Binders) முதலிய வேலைகளில் அனுபவமுள்ளோர்
7. அச்சுக்கோப்பாளர்கள்

தகுதியுடையோர் அனுபவச்சான்றுகளுடனும் சுயவிபரங்களுடனும் 28-02-93 ஞாயிறு காலை 9.00 மணிக்கு நேரில் வரவும்

61, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம். (இ)

பொது முகாமையாளர்
ஈழநாதம்


## அரச பேருந்து பயணிகளிடம் தங்க நகைகள் கொள்ளை

(சென்னை)

சேலம் மாவட்டம் நல்லூர் அருகே வெள்ளைமான்கரடி என்னும் இடத்தில் கடந்த திங்கள் இரவு அரசுப் பேருந்து ஒன்றில் பயணம் செய்த பயணிகளிடமிருந்து அப் பேருந்தில் பயணம் செய்த நான்கு பேர் கொண்ட கோஷ்டியொன்று சுமார் இருபதாயிரம் பெறுமானமுள்ள நகைகளைக் கொள்ளையிட்டுக் கொண்டு தப்பிச்சென்றுள்ளது. இச் சம்பவத்தின் போது கத்திக்குத்து காயங்களுக்குள்ளான பேருந்து ஓட்டுநர் சேலம் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். இப் பேருந்து கருர்விருந்து சேலம் நோக்கி சென்று கொண்டிருந்தது.

## ஈராக் அதிபர் சதாம் அமெ. ஜனாதிபதிக்கு பாராட்டு

அமெரிக்க அதிபர் பில் கிளின்டனின் யுத்த எதிர்ப்புத் தன்மையை நாங்களும் மனிதாபிமானமுள்ள மக்களும் அவரின் மாபெரும் சக்தி என்றே நினைக்கின்றோம் என்று ஈராக் அதிபர் சதாம் ஹுசைன் தெரிவித்தார்.

பக்தாத்தில் தன்னைச் சந்தித்த அமெரிக்காவின் முன்னாள் அட்டர்னி ஜெனரலும், வளைகுடா யுத்தத்திற்கு பகிரங்க எதிர்ப்பு தெரிவித்து வந்தவருமான ரம்சே கிளார்க்குடன் சுமார் 70 நிமிடங்களுக்கும் மேலாகப் பேசிய அவர் மேலும் கூறுகையில், புஷ்ஷின் காலத்தில் இருந்த பகைமைத்தன்மையை மறந்து விடுங்கள். இனிப் புது அத்தியாயத்தை ஆரம்பிப்போம். இரு சாராரும் பரஸ்பரம் கௌரவத்தையும், சட்ட ரீதியான விடயங்களையும் மதித்து உறவுகளை வளர்க்க முடியும் எனவும் குறிப்பிட்ட சதாம் ஹுசைன் பெரியநாட்டின் தலைவரான கிளின்டன் ஆயுதங்களுக்குப் பதிலாக புத்திக்கூர்மையை உபயோகிக்க வேண்டும் என்றும் தெரிவித்தார்.

பொஸ்னியா - ஹர்சகோவியாவில்

## இனப் படுகொலையை விசாரிக்க சர்வதேச விசாரணை மன்றம்

### ஐ. நா. பாதுகாப்புச்சபை முடிவு

(ஜெனீவா)

பொஸ்னியாவிலும் ஹர்சகோவியாவிலும் இனப்படுகொலைக்காக குற்றம் சாட்டப்பட்டவர்களை விசாரணை செய்ய சர்வதேச போர்க் குற்ற விசாரணை மன்றம் ஒன்றை அமைக்க ஐக்கிய நாடுகளின் பாதுகாப்புச்சபை முடிவு செய்திருக்கின்றது.

1991-ம் ஆண்டிலிருந்து சர்வதேச மனிதாபிமான சட்டத்தை மீறியமைக்காக சிலர்களை விசாரிப்பதற்கென பிரான்ஸ் அரசினால் ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு சபையில் கொண்டு வரப்பட்ட தீர்மானத்தை ஏகமனதாக அங்கீகரித்து நிறைவேற்றின.

வவுனியா நகரத்தில்

## கடை உரிமையாளரை பதிவுசெய்ய வற்புறுத்து

வவுனியாவிலுள்ள வர்த்தக உரிமையாளர்களும் அங்கு கடமையாற்றும் சிப்பந்திகளும் தமது விபரங்களைப் பொலிஸ் நிலையத்தில் பதிவு செய்து கொள்ளுமாறு பொலிசார் அறிவுறுத்தல்விடுத்துள்ளனர்.

இவர்கள் அனைவரும் தமது முழுப்பெயர், தேசிய அடையாள அட்டை, பொலிஸ் அனுமதி அட்டை இலக்கம் இவற்றை வவுனியா பொலிஸ் நிலைய பொது மக்கள் உதவிப் பிரிவுக்கு சமர்ப்பிக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

5 ஆம் ஆண்டுப் புலமைப்பரிசில் பரீட்சை

## சிறப்புத் தேர்ச்சிபெற்ற மாணவர்களுக்குப் பதக்கம்

(நமது நிருபர்)

ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் தேர்வில் தேர்ச்சி பெற்ற யாழ்கோட்ட, வலணைக்கோட்ட மாணவர்களுக்கான பாராட்டுவிழா தமிழீழ கல்வி மேம்பாட்டுப் பேரவையினரால் யாழ் இந்து மகளிர் கல்லூரியில் அண்மையில் நடாத்தப்பட்டது.

பாண்ட் வாத்தியம் முழங்க தமிழீழ தேசியக் கொடியைத் தமிழீழக் கல்வி மேம்பாட்டுப் பொறுப்பாளர் திரு. இளங்குமரன் ஏற்றிவைத்தார்.

புலமைப்பரிசில் தேர்வில் தேர்ச்சிபெற்ற மாணவர்களை பாராட்டிப் பரிசில்கள் வழங்கப்பட்டன. இப்பரிசில்களை இரா. சுந்தரலிங்கம் அவர்கள் வழங்கினார்.

தொடர்ந்து விசேட சித்தி பெற்ற முதல் மூன்று மாணவர்களுக்கும் தமிழீழக் கல்வி மேம்பாட்டுப்பேரவையின் சின்னம் பொறிக்கப்பட்ட பதக்கம் வழங்கப்பட்டது இம்மாணவர்களுக்கு தமிழீழ மாணவர் அமைப்பு தலா ஆயிரம் ரூபா பணத்தை ஊக்குவிப்புத் தொகையாக வழங்கியதுடன் கோட்ட மட்டத்தில் முதல் இரண்டு இடங்களையும் பெற்ற மாணவர்களுக்குச் சிறப்புப்பரிசில்களையும் வழங்கியது. இப்பரிசில்களை திரு. கரிகாலன் அவர்கள் வழங்கினார். (வ)

### வங்கிவாடிக்கையாளர் சங்கம்

யாழ். மாவட்ட அரச வங்கிகளின் வாடிக்கையாளர்கள் இணைந்து வங்கி வாடிக்கையாளர் சங்கமொன்றை உருவாக்கியுள்ளனர்.

நீண்டகாலமாகசீரற்றநிலையில் இருக்கும் குடாநாட்டின் அரசவங்கிகளிடமிருந்து சீரான வங்கி சேவையைப் பெற்றுக் கொள்ளும் நோக்கமாகவே மேற்படி வங்கி வாடிக்கையாளர் சங்கம் உதயமாகியுள்ளது.

இச்சங்கம் சீரான வங்கிச் சேவையை வாடிக்கையாளர்களுக்குப் பெற்றுக் கொடுப்பதற்குரிய வழிகளிலும் செயற்படும் என்று தெரியவருகின்றது.

### கண்டெடுப்பு

வேலணை கிழக்கு மாணிக்கம் காந்தரூபி என்பவரது அடையாள அட்டை வேலணை ப. நோ. கூ. சங்க ஊழியர் ச. தவராசால் கண்டெடுத்து வேலணை ப. நோ. கூ. சங்க அலுவலகத்தில் ஒப்படைத்துள்ளார் இதை உரியவர் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம். (88)

சிந்தனைக்கு

முறிக்க வேண்டுமென்று விரும்பும் கையை முத்தமிடுகின்றனர் பலர்.

— ஜார்ஜ் ஹெர்பெர்ட்

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 27 - 02 - 1993
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 2023
த. பெ. எண் 05

# சிங்கள அரசின் திட்டமிட்ட ஏமாற்று

முக்கிய கூட்டம் ஒன்றில் கலந்து கொள்வதற்காக பலாலி ஊடாக யாழ்ப்பாணம் வர முயற்சித்த நான்கு அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் கடந்த மூன்று தினங்களுக்கு முன் ஊரடங்குச் சட்டம் எனக் காரணம் கூறி திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர். இவர்களில் பலர் வெளிநாட்டவர்ஆவர். கொழும்பிலிருந்து பலாலி ஊடாக காங்கேசன்துறைக்கு கப்பலில் வந்த இப்பிரதிநிதிகள் கப்பலில் இருந்து இறங்குவதற்கு அனுமதிக்கப்படாமல் அனுப்பப்பட்டனர்.

சிறிலங்கா அரசாங்கம் மேற்கொண்ட இந்நடவடிக்கையானது யாழ். குடா நாட்டில் இன்று நிலவும் நெருக்கடிகளை உலகம் கண்டு கொள்வதையோ, அன்றி நெருக்கடிக்கு உள்ளாகியுள்ள மக்களுக்கு உதவிகள் கிடைக்கப் பெறுவதையோ தடுப்பதற்கான திட்டமிட்ட நடவடிக்கை ஆகும்.

இன்று தமிழ் மக்களுக்கு உள்நாட்டு, வெளிநாட்டு அரச சார்பற்ற நிறுவனங்கள் குறிப்பிடக்கூடிய உதவிகளை வழங்கி வருகின்றன. அதிலும் இராணுவ நடவடிக்கையினால் இடம்பெயர்ந்த மக்களுக்கும், வீடிழந்து, தொழிலிழந்து அல்லலுறும் மக்களுக்கும், இவ்அரச சார்பற்ற நிறுவனங்கள் பெரும் உதவி புரிந்து வருகின்றன. சில நெருக்கடி வேளையில் அரச உதவிகள் எட்ட முன்பே அரச சார்பற்ற நிறுவனங்களின் உதவி கிடைக்கப் பெறுவதுண்டு.

ஆனால் இவ் அரச சார்பற்ற நிறுவனங்களின் செயற்பாடுகள் குறித்து பிரேமதாசா அரசாங்கம் அவ்வளவாகத் திருப்தி கொண்டிருப்பதாக இல்லை. இதன்காரணமாகவேசர்வோதயம்போன்ற அரச சார்பற்ற நிறுவனங்கள் மீது அரசாங்கம் கெடுபிடிகளை மேற்கொண்டும் வருகின்றது.

அதிலும் குறிப்பாக வடக்கு கிழக்கில் சேவையாற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களில் அரசின் கண்காணிப்பு அதிதீவிரமாக உள்ளதோடு அவை தமது நடவடிக்கைகளை மேற்கொள்வதற்குப் பல முட்டுக்கட்டைகளையும் போட்டு வருகின்றது. எடுத்துக்காட்டாக வடபகுதி மீது அரசாங்கம் விதித்துள்ள பொருளாதாரத் தடையும், கூட்டுப்படைத் தலைமையகத்தில் பெற வேண்டிய அனுமதியும் அரச சார்பற்ற நிறுவனங்களின் நடவடிக்கைகளைப் பெரிதும் மட்டுப்படுத்துபவையாகவேயுள்ளன.

அரசாங்கம் இவ்வாறான நடவடிக்கைகள் மேற்கொள்வதற்குக் காரணம் யாழ். குடா நாட்டின் மீது அரசு விதித்துள்ள தடைகள் பயனற்றுவிடும் என்பதும் யாழ். குடா நாட்டில் ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலை வெளியுலகிற்குத் தெரிய வந்துவிடும் என்பதுமேயாகும். அதாவது வெளிநாடுகளைச் சேர்ந்த அநேக மனிதநேய ஸ்தாபனங்கள் தமது நிலைகளைத் தம்மோடு நெருங்கிய, தமக்கு உதவுகின்ற நாடுகளுக்கு தெரிவித்தே தமக்கான உதவியைப் பெறுகின்றன.

இந்நிலையில் வெளிநாட்டுப் பிரதிநிதிகள் கலந்து கொள்ளும் ஒரு கூட்டத்தைத் தற்போதைய சூழ்நிலையில் யாழ்ப்பாணத்தில் நடத்த வருவது சிறிலங்கா அரசாங்கத்திற்கு நெருக்கடிகளை ஏற்படுத்தும் என்பதில் சந்தேகம் கொள்ளத் தேவையில்லை. சிறிலங்கா அரசாங்கம் தமிழ் மக்கள் மீது ஏற்படுத்தியுள்ள நெருக்கடிகள் வெளிவருமாயின் அவை திட்டவட்டமாக சிங்கள அரசிற்குப் பாதகமாகவே அமையும். அத்தோடு, இவ்விவகாரம் குறித்து வெளிநாடுகளின் அழுத்தங்களும் அதிகரிக்க வாய்ப்புக்கள் உண்டு.

இதன் காரணமாகவே பருத்தித்துறை துறைமுகம் வரை வந்த அதிகாரிகளை சிறிலங்கா அரசு திருப்பி அனுப்பியுள்ளது. சிறிலங்கா அரசாங்கத்தின் இந்நடவடிக்கையானது தமிழர்களின் நெருக்கடியை மேலும் தீவிரமாக்கவும், தமிழ் மக்களின் துயரம் வெளிஉலகிற்கு தெரிய வராமல் தடுத்துவிடவும் மேற்கொள்ளப்பட்ட திட்டமிட்ட நடவடிக்கை என்பதிலும் எதுவித ஐயமுமில்லை.

# தமிழகத்தில் தி.மு.கவிற்கு மீண்டும் ஆதரவு அதிகரிப்பு

## -தினமணியின் கருத்து கணிப்பீடு தெரிவிப்பு

தமிழ்நாட்டில் மீண்டும் ஆட்சி அமைக்கும் அளவுக்கு திராவிட முன்னேற்றக்கழகம் ஆதரவு பெற்றிருப்பதாக தினமணி பத்திரிகை நடத்தியுள்ள கருத்துக் கணிப்பீடு ஒன்றின் மூலம் தெரியவந்துள்ளது.

இக் கணிப்பீட்டின் அடிப்படையில் தி.மு.க விற்கு 41.6 சதவிகித ஆதரவும், காங்கிரஸிற்கு 22 சதவிகித ஆதரவும், ஆளும் கட்சியான அ.இ.அ.தி.மு.க. விற்கு 16.2 சதவிகித ஆதரவும் தற்போது இருப்பதாகத் தெரிகிறது. சென்னையிலிருந்து வெளிவரும் தினமணி நாளிதழ் தனது வாசகர்களுக்கிடையே கருத்துக் கணிப்பு ஒன்றை அண்மையில் நடத்தியது.

தமிழ்நாட்டு அரசியலில் அ.இ.அ.தி.மு.க. - காங்கிரஸ் உறவு முறிவடையும் நிலையிலும், ஜெயலலிதாவின் ஆட்சி நீடிக்குமா என்று கேள்வி எழுப்பப்படும் நிலையிலும், முதல்வர் ஜெயலலிதா மீது ஊழல் குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ள நிலையிலும் இக் கருத்துக் கணிப்பீடு நடத்தப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

மேலும் இக் கருத்துக் கணிப்பீட்டின் மூலம் பாரதீய ஜனதாக்கட்சிக்கு 13.9 சதவிகிதம் பேர் ஆதரவுஅளிப்பதும், காங்கிரஸ்-அ.இ. அ. தி.மு.க. கூட்டணி தேவையற்றது என்று 42.3 சதவிகிதம் பேர் கருதுவதும் தெரியவந்துள்ளது.

அத்துடன் அ.தி.மு.க. பாரதீய ஜனதாக் கூட்டணி ஏற்படக்கூடாது என்று 75.3 சதவிகிதம் பேரும், இத்தகைய கூட்டணி அமைவதற்கு 24.7 சதவிகிதம் பேரும் கருத்து வெளியிட்டுள்ளனர்.

டாக்டர் சுப்பிரமணியம் சுவாமி தலைமையிலான நல்லாட்சிஇயக்கம் நியாயமானது என அறுபத்தெட்டு சதவிகிதம் பேர் ஆதரவு தெரிவித்துள்ளனர்.

திராவிட முன்னேற்றக் கழகம் மீண்டும் ஆட்சியில் அமர்த்தப்படல்வேண்டுமென்று 41.6 சதவிகிதம் பேர் ஆதரவு தெரிவித்துள்ளனர் என்பது, கடந்த பொதுத் தேர்தலில் திராவிட முன்னேற்றக்கழகம் சட்டசபைத் தொகுதியில் ஒன்றைமட்டுமே வெற்றிபெற்றதென்பதும், பாராளுமன்ற தொகுதி எதிலும் வெற்றி பெறவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

# 50 தமிழ் அகதிகள் தமிழ் நாட்டில் கைது

(கொழும்பு)

கடந்த சில நாட்களில் மட்டும், தமிழ்நாட்டில் ஐம்பதுக்கும் மேற்பட்டவர்கள் விடுதலைப்புலிகளோடு தொடர்புடையவர்கள் என்ற குற்றச்சாட்டின் கீழ் பொலிசாரால் கைது செய்யப்பட்டிருப்பதாகத் தெரியவந்துள்ளது.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர்களின் கைவிரல் அடையாளங்கள் பெறப்பட்டு அவை சிறிலங்காப் பொலிசாரின் பார்வைக்கெனவும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாம். இவ்வாறு கைது செய்யப்பட்டவர்களில் அண்மையில் சர்வதேச கடற்பரப்பில் வைத்து வழி மடக்கப்பட்ட விடுதலைப்புலிகளின் கப்பலின் மாலுமிகள் ஒன்பது பேரும் இடம் பெற்றுள்ளனர்.

இவ்வாறு கைவிரல் அடையாளங்கள் பதியப்பட்டதன் மூலம், சிறிலங்காவினால் வேண்டப்படும் விடுதலைப்புலிகள் பலர் இந்தியச் சிறைகளில் இருப்பது தெரிய வந்திருப்பதாகவும் மேலும் கூறப்படுகிறது.

# யாழ். குடா பயணிகள் வவுனியாவில் தடுப்பு

(வடமராட்சி)

யாழ். குடாநாட்டுக்கு வரும் பயணிகளை சிறிலங்கா இராணுவம் வவுனியா தடைமுகாமில் வைத்து மீண்டும் கொழும்புக்கு திருப்பி அனுப்புவதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

யாழ். குடாவுக்கான கடல் நீரேரி கிளாலி பாதை மூடப்பட்டு விட்டதாகவும் அதன் மூலம் பயணம் செய்ய அனுமதிக்கப் படமாட்டாதெனவும் படையினர் தெரிவித்துள்ளனர்.

நீங்கள் கொழும்புக்கு செல்லுங்கள் உங்களை கப்பலில் அனுப்புகின்றோம் என படையினர் ஏளனமாக கூறியதாகவும் தெரியவருகிறது. (யோ)

# சுதந்திரக் கட்சி பா. உ. சபையிலிருந்துவெளியேற்றம்

(கொழும்பு)

சிறிலங்கா பாராளுமன்றத்தில் ஏற்பட்ட அமளிதுமளியைத் தொடர்ந்து சபாநாயகரின் வேண்டுகோளுக்கு இணங்க சிறிலங்கா சுதந்திரக் கட்சி எம். பி. ஒருவர் நேற்று முன்தினம் பாராளுமன்றத்திலிருந்து பொலிசாரால் வெளியேற்றப்பட்டார்.

பாராளுமன்றத்தில் ராஜாங்க அமைச்சர் திரு. நெல்சன் அறிக்கை ஒன்றை விடுத்தபொழுது பொலநறுவை மாவட்ட சுதந்திரக் கட்சி எம்.பி. மைத்திரிபாலசிறிசேன மேற்கொண்ட குறுக்கீடுகளால் சபையில் ஏற்பட்ட கூச்சல் குழப்ப நிலையைக் கட்டுப்படுத்தி அமைதியை ஏற்படுத்த சபாநாயகரால் முடியாமல் போனதால் சிறிசேன எம். பி. சபையிலிருந்து பலவந்தமாக வெளியேற்றப்பட்டார் என செய்திகள் தெரிவிக்கின்றன.

# கலை நிகழ்ச்சி

(வடமராட்சி)

வடமராட்சி விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக் கழகத்தின் கரவெட்டி அவையினர் வழங்கும் 'விலங்குகள்' நாடகமும் சாந்தன் இசைக் குழுவினர் வழங்கும் ''தாயக கீதங்கள்'' இசை நிகழ்ச்சியும் இன்று இரவு 7.00 மணிக்கு பருத்தித்துறை பழைய பஸ் நிலைய மைதானத்தில் நடைபெறவுள்ளது. [யோ]

## 2000 பீப்பா

நாட்டில் தற்பொழுது ஏற்பட்டுள்ள எரிபொருள் பிரச்சினை பற்றி சிறிலங்கா நிதியமைச்சின் செயலாளர் பாஸ்கரலிங்கத்தை சந்தித்து இங்குள்ள நிலைமைகளை எடுத்துக் கூறியதையடுத்தே சிறிலங்கா ஜனாதிபதியினால் மேற்படி மண்ணெண்ணெய் அனுப்பி வைக்க அனுமதி வழங்கப்பட்டதாக தெரிய வருகின்றது. இக் கப்பல் ஒரு சில நாட்களில் கொழும்பு துறைமுகத்திலிருந்து பருத்தித்துறை நோக்கி புறப்படவுள்ளதாகவும் தெரியவருகின்றது. ( பா )

# இடமாற்றம்

யாழ். கல்விக் கோட்டத்தைச் சேர்ந்த 34 ஆசிரியர்களுக்கு எதிர்வரும் முதலாம் திகதி முதல் உள்ளக இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

## புலிகள்

போது நான் யாருக்கும் தெரியாமல் தப்பி ஓடி அருகிலிருந்த கடலிற்குள் நின்ற படகொன்றில் ஏறி வந்து மாலைதீவை அடைந்தேன் என கூறியுள்ளார்.

சிறிலங்கா இராணுவ வட்டாரங்கள் இது பற்றிக் கூறுகையில்;பெப்ரவரி 1இல் இந்த இராணுவச் சிப்பாய் காணாமல் போனதாகவும் இவரை இராணுவத்தினர்தேடியும்அவரின் நடமாட்டம் பற்றிய தகவல் எதுவும் கிடைக்கவில்லை என கூறினர்.

இராணுவத்திலிருந்துசொல்லாமல் கொள்ளாமல் விலகியவர் வரிசையில் இவரும் சேர்க்கப்பட்டார் எனவும் சுமார் 7000 பேர் இதுவரை இவ்வாறு இராணுவத்திலிருந்து விலகியுள்ளதாகவும் அவ்வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

# இன்று அரிச்சந்திரா

(யாழ்ப்பாணம்)

மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் இன்றிரவு 7.00 மணியளவில் ''அரிச்சந்திர மயானகாண்டம்'' என்ற புராண நாடகம் நடைபெறவுள்ளது. இந்த நாடகத்தில் அரிச்சந்திரனாக சாந்தனும், சந்திரமதியாக அரியாலையூர் செல்வமும் நடிக்கவுள்ளனர்.

இந்த நாடகத்தின்மூலம் திரட்டப்படும் நிதி காங்கேசன்துறை நடேஸ்வராக் கல்லூரியின் கல்வி அபிவிருத்திக்காகப் பயன்படுத்தப்படும்.

## குத்தரிசி வரும்

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டில் தற்பொழுது ஏற்பட்டுள்ள அரிசித் தட்டுப்பாட்டை ஓரளவு பூர்த்திசெய்யும் முகமாக ''வாதுவ'' என்ற கப்பலில் ஒரு தொகுதி குத்தரிசி ஏற்றப்படுவதாக தெரியவருகின்றது.

மேற்படி கப்பலில் பொருள்கள் ஏற்றி முடிந்ததும் மிக விரைவில் பருத்தித்துறையை நோக்கி புறப்படவுள்ளது. மேலும் இக்கப்பலில் எடுத்து வரப்படுகின்ற குத்தரிசி யாழ். செயலக புனர்வாழ்வுப் பகுதியினால் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களிற்கு கட்டுப்பாட்டு விலையில் விநியோகிக்கப்படவுள்ளதாக யாழ். செயலக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (பா)

## அரசை

பினால், கோடிக்கணக்கான பவுண்கள் விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கு கிடைக்கின்றது. இப் பணம் பல்வேறு வர்த்தகங்களில் முதலீடு செய்யப்படுகின்றது.

விடுதலைப் புலிகளின் கப்பல் கம்பனிக்கு ஐந்து கப்பல்கள் உள்ளன. இக் கப்பல் கம்பனிகள் தமிழர்கள் செல்வாக்குடன் விளங்கும் சிங்கப்பூரிலும் ஏனைய தூரகிழக்கு நாடுகளிலும் இருந்தும் இயக்கப்படுகின்றது எனவும் கிறிஸ் மோரிஸ் தெரிவித்தார்.

# பாதுகாப்பு வலயத்தில் குண்டு வீழ்ந்து வெடித்தது

(வடமராட்சி)

சிறிலங்கா கடற்படையினர் மீனவர்கள் மீது ஏவிய பீரங்கிக் குண்டுகளில் சில சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் பாதுகாப்பு வலயத்திற்கு உட்பட்ட பருத்தித்துறை இறங்குதுறைக்கடற்பகுதியில் விழுந்து வெடித்தன.

நேற்று காலை 9.00 மணியளவில் கட்டைக்காடு - வெற்றிலைக்கேணி பகுதியை நோக்கி ரோந்து சென்று கொண்டிருந்த 'வீரயா சூரயா' என்ற பாரிய கப்பலிலிருந்து கடல் தொழிலில் ஈடுபட்டிருந்த மீனவர்கள் மீது பத்துக்கும் மேற்பட்ட பீரங்கிக் குண்டுகளையும், துப்பாக்கி ரவைகளையும் ஏவியதில் சில குண்டுகளும், ரவைகளும் பாதுகாப்பு வலையப் பகுதியில் விழுந்து வெடித்தன.

இச்சம்பவத்தை தயடுத்து இறங்குதுறையில் காணப்பட்ட தொழிலாளர்கள் பதறிய நிலையில் சிதறி ஓடினர். மற்றும் ஒரு சில மீனவர்களின் படகுகளுக்கு சிறு சிறு சேதம் ஏற்பட்டன. பல ஆயிரம் ரூபா பெறுமதியான வலைகள் வெட்டப்பட்டன. வெள்ளிக்கிழமையாக இருந்தமையால் குறைந்தளவு மீனவர்களே கடலில் காணப்பட்டதால் உயிர்ச் சேதங்கள் தவிர்க்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

[யோ]

## கணித உபகரணம் தயாரித்தல் போட்டி

யாழ். மாவட்ட மூலவள நிலையம் சேவைக்கால ஆலோசகர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் மட்டத்தில் நடாத்தும் கணித உபகரணம் தயாரித்தல் போட்டி முடிவுத் திகதி ஆர்வமுடைய பலரின் வேண்டுகோளிற்கு இணங்க 03 - 03 - 1993 ந் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது. சிறந்த கற்றல்-கற்பித்தல் உபகரணத் தொகுதியை செய்பவர்களிற்கு பெறுமதியான பரிசில்கள் வழங்கப்படும்.

## வீரச்சாவு



2-ம் லெப்
நந்தகோபால்
(பற்றிக்)

மூதூர் 'வாள்கட்டு என்னும் இடத்தால் சென்ற விடுதலைப் புலிகள் போராளிகள் மீது கடந்த 12ஆம் திகதி இரவு 10 மணியளவில் சிறிலங்கா இராணுவத்தினர் பதுங்கியிருந்து தாக்கியதில் 2-ம் லெப்டினன்ட் நந்தகோபால் / பற்றிக் (ஏகாம்பரம் அமிர்தன், உப்பாறு, ஆலங்கேணி, திருக்கோணமலை) வீரச்சாவடைந்தார்.

இவருக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் தமது வீர வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

## இலட்சார்ச்சனை

அல்வாய் வேவிலந்தை சிறி முத்துமாரி அம்மன் ஆலயத்தில் இலட்சார்ச்சனை பூசை நேற்று முன்தினம் முதல் ஆரம்பமாகி நடைபெற்றுவருகிறது இறுதி நாள் 7 ஆம் திகதி 108 சங்காபிஷேகமும் அம்பாள் வீதி உலாவும் நடைபெறும். (யோ

## 150 தொழிலாளர் வைத்தியசாலையில்

நீர்கொழும்பிலுள்ள ஆடை தயாரிப்புத் தொழிற்சாலையில் இரசாயனப் பொருள்களைக் கொண்ட பீப்பா ஒன்று வெடித்ததால் வெளியேறிய வாயுவைச் சுவாசித்த 150 தொழிலாளர் வைத்திய சாலையில் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டனர்.

## தோட்டத்திற்குள் மனிதக் கால்

[வடமராட்சி]

மந்திகை வைத்தியசாலைக்குப் பின்புறமாகவுள்ள தோட்டம் ஒன்றில் வெட்டித் துண்டாக்கப்பட்ட மனிதனின் கால் ஒன்று கண்டெடுக்கப்பட்டது.

(யோ)

## பொருள்களை

பருத்தித்துறை துறைமுகத்தில் பொருள்களை இறக்க வந்து சேரும் பட்சத்தில் ஏற்படவுள்ள நெருக்கடி நிலைமையினைத்தவிர்க்கும்முகமாகவே இழுவைப்படகுகளுடன் இணைந்து மீன்பிடிப்படகுகளும் பொருள்களை இறக்கும் பணியில் ஈடுபடவுள்ளதாக தெரியவருகின்றது. [யா], [நி]

## பிரான்பற்று

நிதிகள் நேற்று யாழ். செயலகத் திட்டப்பணிப்பாளரை அணுகிய போது, கூட்டுப் படைத் தலைமையகம் அனுமதி வழங்கினால் மட்டுமே நிவாரணம் வழங்கப்படும் என தெரிவித்ததாகவும் தொடர்ந்து மறியலில் ஈடுபட்டால் உதவி அரசாங்க அதிபர் செயலக ஊழியர்கள் யாழ். செயலகத்திற்கு இடமாற்றம் செய்யப்படுவர் என தெரிவித்ததாகவும் கூறப்படுகிறது.

## சனிமாற்றம்

05-03-1993 இல் நிகழும்
சனிமாற்றம் உங்களுக்கு நன்மைபயக்குமா?
பன்னிரு ராசிகளுக்கும் ஒரே புத்தகமாக விற்பனையாகின்றது.

விலை ரூபா - **12.00 மட்டுமே**

விபரங்கட்கு:- திருக்கணித நிலையம் மட்டுவில், சாவகச்சேரி.

(3382)

## மரண அறிவித்தல்

அப்பாக்குட்டி வல்லிபுரம்

சரசாலை வடக்கைச் சேர்ந்த அப்பாக்குட்டி வல்லிபுரம் 26-2-93இல் காலமாகிவிட்டார். இவர் மாணிக்கத்தின் அன்புக் கணவரும், நவரத்தினம் (கணேசபுரம் கிளிநொச்சி) இராசதுரை (சீசன் புடைவை சாவகச்சேரி) யோகநாதன் (அதிபர், நாகேஸ்வர வித்தியாலயம் கரவெட்டித்திடல் புளியம்பொக்கணை), தேவராசா, பாலன், புனிதவதி ஆகியோரின் அருமைத் தந்தையும், ரூபவதி, சுதந்திரதேவி, றஞ்சனா (ஆசிரியை இந்து மகாவித்தியாலயம் குமரபுரம், பரந்தன்) நிர்மலாதேவி, ஜெயசிறி, தம்பிஐயா (இளைப்பாறிய பொலீஸ் உத்தியோகத்தர்) ஆகியோரின் மாமனாருமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று பிற்பகல் 3.30 மணியளவில் சரசாலை மயானத்தில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:

வ. இராசதுரை
(மகன்)

(சி-4357)

## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள் 26-02-1993

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்:-8413

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கம்

24-3071, 26-6527, 28-0940, 27-7081, 26-8839, 26-786, 26-495, 26-5071, 43-2524, 42-1750, 24-8710, 42-1722, 41-4176, 26-0672, 26-0032.

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கம்

24-4451, 26-1735, 28-1085, 41-9696, 24-4992 28-6996, 22-6897, 24-5818, 24-7941, 41-5015, 28-1794, 26-5178, 26-3998.

## தையல், தட்டச்சு கண்காட்சியும் மலிவு விற்பனையும்

அன்பான தமிழீழ மக்களே,
சுருட்டுத் தொழிலாளர்களே,
ஆதரவாளர்களே,

வடபிராந்தியசுருட்டுத் தொழிலாளர் சங்க நடவடிக்கைகளில் ஒன்றான தையல், தட்டச்சு பயிற்சியின் 3ஆம் கட்ட மாணவிகள் தயாரித்த ஆடைகளின் சிறப்புகளை வெளிப்படுத்தும் கண்காட்சி 27.2.93 இன்று காலை 9.00-5.30 மணிவரை சங்கப் பணிமனைக்கு அருகிலுள்ள பயிற்சி நிலையத்தில் நடைபெறவுள்ளது. இக் கண்காட்சியில் சகலரும் கலந்து கொண்டு, குறைந்த விலையில் விற்கப்படும் மலிவு விற்பனையிலும் பங்கு கொண்டு சிறப்பிக்குமாறு அன்போடு அழைக்கின்றோம்.

நிர்வாக சபையினர்

(சி-6100)

## பதவி வெற்றிடங்கள்

1. ஆண், பெண் இருபாலாருக்கும் நவீன டிசைன்களில் ஆடைகள் தைப்பதற்கும்,
2. பாடசாலை மாணவர்களுக்குரிய பாக்குகள் தைப்பதற்கும் ஆட்கள் தேவை.

அனுபவமுள்ளவர்கள் சான்றிதழ்களுடனும் சுயவிபரங்களுடனும்,

01 - 03 93 திங்கட்கிழமை காலை 9 மணிக்கு நேரில் வரவும், அன்றேல் பின்வரும் விலாசத்திற்கு விண்ணப்பிக்கவும்.

விள. இல. 184
ஈழநாதம்
31, மகேந்திரா வீதி,
யாழ்ப்பாணம்

(சி-6101)

# கலை பண்பாட்டுக் கழகம்

## யாழ். மாவட்டத்தினரால் நடாத்தப்படும் கலை நிகழ்ச்சியின் விபரம்

| காலம் | இடம் | நிகழ்ச்சி |
|---|---|---|
| 27-02-93 மாலை 7.30 மணிக்கு | பருத்தித்துறை பேருந்து காரியாலயம் | சாந்தன் இசைக்குழுவினரின் இசை நிகழ்ச்சி<br>தென்மராட்சி கலை பண்பாட்டுக்கழக ஆதரவில் ''உணர்வுடன் எழுவோம்'' நாடகம் (சமகால நிகழ்வு) |
| 28-02-93 மாலை 07.30 | ஞானப்பிரகாசர் ச. ச. நி அரங்கில் | களத்தில் காத்தான் சிந்து நடைக்கூத்து (புத்தூர்)<br>அவலங்கள் நாடகம் ( ,, ) |
| 06-03-93 மாலை 07.30 | யாழ். பல்கலைக்கழகம் கைலாசபதி அரங்கில் | சாந்தன் இசைக் குழுவினரின் இசை நிகழ்ச்சி<br>தென்மராட்சி கலை பண்பாட்டுக்கழக ஆதரவில் ''உணர்வுடன் எழுவோம்'' நாடகம் (சமகால நிகழ்வு) |
| 10-03-93 மாலை 07.30 | கலைமகள் விளையாட்டு மைதானம், அரியாலை | களத்தில் காத்தான் (புத்தூர்)<br>அவலங்கள் - நாடகம் (புத்தூர்) |

**அன்பளிப்பு 10/-, 15/-, 25/-, 50/-**

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

(சி-6102)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி. 31 ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1993ஆம்ஆண்டு பெப்ரவரி மாதம் 27 ஆம் திகதி அச்சிட்டுவெளியிடப்பட்டது